


**27.11. 2024**

தலைப்புச் செய்திகள்

1. குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது 4 நாள் தமிழக பயணத்தின் ஒருபகுதியாக நீலகிரி ராணுவ பயிற்சி கல்லூரி நிகழ்வில் நாளை பங்கேற்கிறார்.

2. வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்ட குழந்தை திருமணம் இல்லா இந்தியா பிரச்சாரம் உறுதுணையாக இருக்கும் என்று மத்திய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்னா தேவி தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாட்டில் சீருடை பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கபட்ட மூன்றாயிரத்து 359 காவலர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று வழங்கினார்.

4. வங்ககடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 12 மணிநேரத்தில் புயலாக வலுப்பெறக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய கோப்பை ஜுனியர் ஹாக்கி போட்டியில் மஸ்கட்டில் இன்றுமாலை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு 4 நாள் அரசுமுறை பயணமாக இன்று தமிழகம் வந்தடைந்தார்.

நீலகிரி மாவட்டம் உதகை வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரியில் நடைபெறும் நிகழ்ச்சியில் நாளை அவர் பங்கேற்கிறார்.

உதகை ஆளுநர் மாளிகையில் பழங்குடியின மக்களை நாளைமறுநாள் சந்தித்து கலந்துரையாடும் அவர், அவர்களின் கலாச்சார நடன நிகழ்ச்சிகளை பார்வையிடுகிறார்.

அதனைத் தொடர்ந்து வரும் சனிக்கிழமை குடியரசு தலைவர் கோவை புறப்பட்டு செல்கிறார்.

இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று கோவை விமான நிலையம் வந்த குடியரசு தலைவரை மாநில அமைச்சர் திரு. மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கிராந்திகுமார் உள்ளிட்டோர் அன்புடன் வரவேற்றனர்.

பின்னர் கோவையிலிருந்து சாலை மார்க்கமாக குடியரசு தலைவர் உதகை புறப்பட்டு சென்றார்.

இதுகுறித்து எமது நீலகிரி செய்தியாளர்

.. வாய்ஸ் ..

குடியரசு தலைவரின் வருகையை ஒட்டி கோவை மற்றும் நீலகிரி மாவட்டத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

மணிப்பூர், உத்தரபிரதேச மாநிலம் சம்பல் வன்முறை மற்றும் வணிக நிறுவனத்திற்கு எதிரான ஊழல் குற்றசாட்டுகள் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இருஅவைகளும் நாள்முழுமைக்கும் இன்று ஒத்திவைக்க பட்டன.

மக்களவை இன்று கூடியவுடன் காங்கிரஸ், சமாஜ்வாடி, திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் இப்பிரச்சனையை எழுப்பி முழக்கமிட்டன.

அவையை சுமூகமாக நடத்த எதிர்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா, கேள்வி நேரத்திற்கு பின்னர் அனைத்து பிரச்சனைகள் குறித்து விவாதிக்க அனுமதி வழங்கப்படும் என்றார்

இருப்பினும் எதிர்கட்சியினர் அவையின் மையப்பகுதியில் குழுமி தொடர்ந்து குரல் எழுப்பவே அவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவையில் இப்பிரச்சனைகள் குறித்து எதிர்கட்சிகளின் ஒத்திவைப்பு தீர்மானத்திற்கு அவைத்தலைவர் திரு. ஜக்தீப்தன்கர் அனுமதி மறுக்கவே, எதிர்கட்சியினர் தொடர்ந்து கோஷங்கள் எழுப்பியதையடுத்து மாநிலங்களவையும் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖

அஷ்விணி வைஷணவ்

நாட்டின் ரயில் பெட்டி தொழிற்சாலையில் அதிவேக விரைவு ரயில்கள் உற்பத்திக்கான வடிவமைப்புகள் ஆராயப்பட்டு வருவதாக மத்திய ரயில்வே மற்றும தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவிதுள்ளார்

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், மணிக்கு 280 கிலோ மீட்டர் வேகத்தில் விரைவு ரயில்களை இயக்குவதற்கான வடிவமைப்புகள் ஆய்வுசெய்யப்பட்டு வருவதாக கூறினார்.

சமூக வலைதளங்களில் கொச்சையான தளங்களை தடை செய்யும் வகையில் தற்போதைய சட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

நிமு பென்

அன்பூர்ணா தேவி

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வளர்ச்சியடைந்த பாரதம் தொலைநோக்கு பார்வையை முன்னெடுத்துச் செல்லும் வகையில் குழந்தை திருமணம் இல்லா இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய மகளிர் மற்றும குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் குழந்தை திருமணத்திற்கு எதிரான தேசிய பிரச்சாரத்தை இன்று துவக்கிவைத்து பேசியஅவர், அனைத்து மாவட்டங்கள், கிராமங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், உள்ளாட்சி அமைப்புகளில், குழந்தை திருமண நிகழ்வை முடிவுக்கு கொண்டுவர அரசு உறுதி பூண்டிருப்பதாக தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 25 கோடி குழந்தைகளையும் இந்த பிரச்சாரம் சென்றடைவதன் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர், அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நடவடிக்கைகளால் குழந்தை திருமணத்தை தடுக்க முடியும் என்று கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

கஜேந்திரசிங் ஷெகாவத்

அஸ்ஸாம் காசிரங்கா தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தின் கொஹோரா மலைத்தொடரில் சர்வதேச சுற்றுலா விழாவின் 12-வது பதிப்பை மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் இன்று துவக்கி வைத்தார்.

இதில் சுற்றுலா சேவை வழங்குனர், மாணாக்கர், விடுதி மற்றும் உணவக நிறுவன உரிமையாளர்கள் உள்ளிட்ட 400-க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்கின்றனர்.

வடகிழக்கு மாநிலங்களில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் இவ்விழா நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

கனிம ஏலம்

நாட்டின் முதலாவது கனிம வளங்கள் தொகுப்பு ஏலத்தை மத்தியஅரசு நாளை கடற்பகுதிகளில் தொடங்குகிறது.

13 கனிமங்களை உள்ளடக்கிய முதல்பிரிவு கனிம தொகுப்பு ஏலம், அரபிக்கடல் மற்றும் அந்தமான் கடல்பகுதிகளில் நாளை நடைபெறுகிறது.

கட்டமைப்பு மேம்பாடு, உயர் தொழில்நட்ப உற்பத்தி, பசுமை எரிசக்தி பயன்பாட்டிற்கு முக்கிய பங்காற்றும் இக்கனிமம் மற்றும் தாதுபொருட்கள் ஆழ்கடல் வளங்களிலிருந்து ஏலம் விடப்படுகிறது.

இதற்கான ஆழ்கடல் ஆய்வு பணிகளை மத்திய கனினவளத்துறை அமைச்சகம் தொடங்கவுள்ளது.

நம்நாட்டின் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 20 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பில் தாதுப்பொருட்கள் நிரம்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் சைபர் குற்ற தடுப்பு, போதை பொருள் ஒழிப்பு, பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுத்தல் போன்றவற்றின் அவசியத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று சீருடை பணியாளர் துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றாயிரத்து 359 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் விழாவில் பேசியஅவர், காவல்துறையினருக்கான பல்வேறு நலத்திட்டங்ளை அரசு செயல்படுத்தி வருவதாகவும் எடுத்துரைத்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

ராஜகண்ணப்பன்

தமிழ்நாட்டில் பால் உற்பத்தி புதிய உச்சத்தை எட்டிவருவதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று இதனை தெரிவித்துள்ள அவர், கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தும் அரசின் திட்டங்களால் இந்த வளர்ச்சி சாத்தியமானதாக குறிப்பிட்டுள்ளார்.

பால் உற்பத்தியாளர்களின் 5 லட்சம் கறவை மாடுகளுக்கு 85 விழுக்காடு மானியத்தில் கால்நடை காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக

கூறிய அவர், பால் உற்பத்தியாளர்களின் நலனிற்கான பல்வேறு முன்னெடுப்புகளை அரசு மேற்கொண்டு வருவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

வானிலை

தென்மேற்கு வங்ககடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாகைக்கு தென்கிழக்கே 370 கிலோமீட்டர் தொலைவிலும், சென்னைக்கு தெற்கு தென் கிழக்கே 550 கிலோ மீட்டர் தொலைவிலும், நிலைகொண்டுள்ளது.

இது அடுத்த 12 மணிநேரத்தில் புயலாக வலுப்பெற கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

நாகை மழை

நாகை மாவட்டத்தில் தொடர்கனமழை காரணமாக மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு ஒலி பெருக்கிகள் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள 125 ஜே.சி.பி. இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன.

இம்மாவட்டத்தில் மழை நிலவரம் குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

நெல்லை மாவட்டத்தில் கனமழை காரணமாக மீனவர்கள் கடலுக்குள் செல்லவில்லை என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

மழை மாவட்டங்கள்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி திருத்துறை பூண்டி, நன்னிலம் என அனைத்து பகுதிகளிலும் இடைவிடாமல் பெய்து வரும் கனமழையால் பொதுமக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தேசிய மீட்பு குழுவினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருவாரூர் வந்தடைந்தனர்.

மயிலாடுதுறையில் கனமழை காரணமாக விவசாயிகள் சாகுபடி செய்த நூற்றுக்கணக்கான ஏக்கர் பயிர்கள் நீரில் மூழ்கி வெள்ளகாடாக காட்சியளிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

❖❖❖❖❖❖❖

ஹாக்கி

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் மஸ்கட்டில் இன்றுமாலை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.